26-5-1991

## ★ ராஜீவ் கொலை; 'வெரித்தாஸ்' தரும் விளக்கம்!

[மணிலா]

திரு. ராஜீவ் காந்தியை கொன்றது யார் என்ற கேள்வி இன்று பெரும் சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளது. இக்கொலை குறித்து 'வெரித்தாஸ்' வானொலியின் 'உண்மையின் எண்ணங்கள்' விமர்சனம் வருமாறு:

(4ம் பக்கம் பார்க்க)

விலை ரூபா 4-50

# ஈழநாடு

THE EELANADU
'NATIONAL TAMIL DAILY'

மலர் 33 | வைகாசி 12 | துல்ஹஃதா 11 | இதழ் 104
யாழ்ப்பாணம் | ஞாயிற்றுக்கிழமை | 26-05-1991

## ராஜீவ் கொலை வீடியோவில் பதிவு

(சென்னை)

திரு. ராஜீவ் காந்தி கொலை செய்யப்பட்ட சமயம் எடுக்கப் பட்ட வீடியோ படத்தின் ஒளிப்பதிவு நாடா பொலிசாருக்கு கிடைத்துள்ளது.

குறிப்பாக ராஜீவ் படு

(4-ம் பக்கம் பார்க்க)

## இந்திய பிரதமருடன் விஜயதுங்க பேச்சு

[புதுடில்லி]

இந்தியப் பிரதமர் திரு. சந்திரசேகருடன் இலங்கைப் பிரதமர் திரு. டி. பி. விஜேதுங்க நேற்றுமாலை பேச்சுக்கள் நடாத்தியுள்ளார்.

ராஜீவின் இறுதிச் சடங்

(4ம் பக்கம் பார்க்க)

# ● கேலிக்கூத்துக்குரிய அரசின் போர்நிறுத்தத்தை விடுதலைப் புலிகள் நிராகரிப்பு

## நிரந்தர யுத்த நிறுத்தத்திற்கு ஆதரவு

(யாழ்ப்பாணம்)

வடக்கு-கிழக்குப் பகுதியில் வெசாக் தினத்தை முன்னிட்டு மூன்றுநாள் யுத்த நிறுத்தம் மேற்கொள்ளவுள்ளதாக இலங்கை அரசு அறிவித்திருப்பதை விடுதலைப் புலிகள் நிராகரித்து விட்டனர்.

இவ்வாறு தமிழீழவிடுதலைப் புலிகளின் தலைமைச் செயலகத்திலிருந்து வெளியாகியுள்ள இந்த அறிக்கையில் மேலும் அதிகாரபூர்வமான அறிக்கை கூறப்பட்டிருப்பதாவது; யில் தெரிவிக்கப்பட்டுள்ளது. ''பௌத்தர்களின் வெசாக்

[4ம் பக்கம் பார்க்க]

## இராணுவ பயிற்சிக்கு அமெரிக்கா உதவி

[வாஷிங்டன்]

இலங்கைப் படையினருக்கு இராணுவ கல்விக்கும், பயிற்சிக்குமாக அமெரிக்கா 1992-ம் ஆண்டிற்கு 10 கோடி ரூபா நிதியுதவி வழங்கவுள்ளது.

[4ம் பக்கம் பார்க்க]

## இலங்கை அரசின் தவறை அமெரிக்கா சாடுகிறது

[வாஷிங்டன்;

விடுதலைப் புலிகள் கடந்த ஜனவரி மாதம் ஒருதலைப்பட்சமாக அறிவித்த யுத்த நிறுத்தத்தைக் கடைப்பிடிக்க இலங்கை அரசு தவறியதை அமெரிக்கா சாடியுள்ளது.

எனினும் இது இறுதியான முயற்சியல்ல மேலும் ஒரு யுத்தநிறுத்தத்தை இருதரப்பும் கடைப்பிடித்து பேச்சுவார்த்தையை நடத்தவேண்டு

[4ம் பக்கம் பார்க்க]

## தமிழர் வீடுகளில் பொலிஸார் சோதனை

(சென்னை)

தமிழகத்தில் அகதி முகாம்களுக்கு வெளியே தங்கியுள்ள இலங்கைத் தமிழர்கள் வீடுகள் பலத்த சோதனைக்குட்படுத்தப் பட்டு வருவதாக பத்திரிகைகள் செய்திவெளியிட்டுள்ளன.

[4ம் பக்கம் பார்க்க]

## ராஜீவை கொன்றது சீக்கிய பெண்ணா?

[சென்னை]

திரு. ராஜீவைகொலைசெய்த பெண் சீக்கிய பெண்களை போல் உடையணிந்திருந்ததால் அவர் சீக்கிய பெண்ணாக இருக்கலாம் என்ற கோணத்திலும் விசாரணை நடைபெற்று வருகிறது.

இதேவேளைவேறு யாரும் இவ்

(4ம் பக்கம் பார்க்க)

## வெளிநாட்டு தலையீடு; பிரேமாக்கு ஆலோசனை

[கொழும்பு]

இலங்கை பிரச்சனையில் வெளிநாட்டு தலையீடு ஏற்பட முன் விடுதலைப்புலிகளுடன் இணக்க நிலை ஒன்றை ஏற்படுத்துமாறு ஜனாதிபதி பிரேமதாஸாவுக்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது.

'லங்கா கார்டியன்' வெளியிட்டுள்ள கட்டுரை ஒன்றில் இதுபற்றி குறிப்பிடப்பட்டுள்ளது.

ஜனாதிபதி பிரேமதாஸாவும் இதுகுறித்து அக்கறை கொண்

(4ம் பக்கம் பார்க்க]

## பி. பி. ஸி. எச்சரிக்கை

(லண்டன்)

இந்தியாவிலுள்ள இலங்கைத் தமிழ் அகதிகள் அங்கிருந்து நாடு கடத்தப்பட்டால் பெரும் குழப்பம் ஏற்படுவதோடு இந்தியாவை புறக்கணித்து வெளிநாட்டு தலையீடும் ஏற்படக்கூடும் எனபி.பி.ஸி. நேற்றிரவு எச்சரித்தது.

[பூ]

## தலைமை ஏற்க வேண்டாமென சோனியாவிற்கு எச்சரிக்கை!

[புதுடில்லி]

இந்திரா காங்கிரஸ் கட்சியின் தலைமைப் பதவியை ஏற்கக்கூடாதென திருமதி சோனியா காந்திக்கு எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இக் கட்சியின் தலைமைப் பொறுப்பை ஏற்றுக்கொள்ளுமாறு கட்சி உறுப்பினர்கள் தொடர்ந்து வற்புறுத்திவந்த போதும் திருமதி சோனியா இதனை ஏற்கமறுத்துவரும் இவ்வேளை இந்த எச்சரிக்கை விடுக்

(4ம் பக்கம் பார்க்க)

## இல. தமிழர் மீது பலத்த கண்காணிப்பு

(சென்னை)

தமிழகத்தில் உள்ள இலங்கைத் தமிழர்கள் தங்கியுள்ள அகதி முகாம்களின் மீதான கண்காணிப்பு பெருமளவு தீவிரப்படுத்த பட்டுள்ளது.

ராஜீவ் காந்தி கொல்லப் பட்டதையடுத்தே இலங்கைத் தமிழ் அகதிகள் முகாம்கள் மீதான கண்காணிப்பு பலப் படுத்தப்பட்டுள்ளதாக தமிழக அரசின் உயரதிகாரியொருவர் தெரிவித்துள்ளார்.

இதேவேளையில் கடற்கரை

(4ம் பக்கம் பார்க்க)

## இலங்கை - பிரிட்டன் கருத்து முரண்பாடு

(லண்டன்)

இலங்கைக்கான பிரிட்டிஷ் தூதர் திரு. டேவிட் கிளாட்ஸ்ரோன் விவகாரம் குறித்து இலங்கைக்கும் - பிரிட்டனுக்கும் இடையில் கருத்து முரண்பாடு ஏற்பட்டுள்ளதாகக்

(4ம் பக்கம் பார்க்க)

## 100 தமிழ் போராளிகள் தமிழகத்தில் கைது?

(சென்னை)

தமிழ்நாட்டில் நூற்றுக்கு மேற்பட்ட இலங்கை தமிழ்ப் போராளிகள் கடந்த 3 தினங்களில் கைது செய்யப்பட்டுள்ள

(4-ம் பக்கம் பார்க்க)

# வரிவிளம்பரம்

### தரன் படப்பிடிப்பாளர்

கலர்-கறுப்பு வெள்ளைப் படங்கள், றபர்சீல், பிளாஸ்ரிக் வேலை, விளம்பர போட், புளொக் டிசைன், மற்றும் ஓவிய வேலைகள் தரன் படப்பிடிப்பாளர் 87, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம். (சி-4673)

### அம்பாள் திருமண சேவை

Engineer க்கு அழகிய A/L அல்லது பட்டதாரி மணப்பெண் தேவை. சின்னச்சாமிக் குருக்கள் சண்முகஐயர் வீரமாகாளி அம்மன் கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம். (சி 4775)

### தவறிவிட்டது

திருநாவுக்கரசு மோகனதாஸ் அவருடைய 683470368 V அடையாள அட்டை சாவகச்சேரி தபால் நிலையத்திற்கு முன்னுல் தவறிவிட்டது. எடுத்தவர்கள் தயவுசெய்து விக்கினேஸ்வரன் ஜுவலர்ஸ், கண்டி வீதி, சாவகச்சேரி அல்லது விமலாஸ், நவீனசந்தை, சாவகச்சேரியில் ஒப்படைக்கவும. மிகக் கூடுதலான சன்மானம் வழங்கப்படும். [சி-4777]

### பழைய புத்தகங்கள்

பழைய புத்தகங்கள், கொப்பிகள், சஞ்சிகைகள், பேப்பர், போத்தல், பித்தளை, செப்பு, கோழித்தீன், வெற்றுப்பைகள் வாங்கப்படும் விற்கப்படும். சேஞுதிராசா 108, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம். (சி 4755)

### கணிதம்

O/L 90, 91 கணித மீட்டல் வகுப்புக்கள் ஆரம்ப அறிவில் இருந்து விசேட சித்தி அதி விசேடசித்தியடைய வல்ல அனுபவமுள்ள ஆசிரியரால் கற்பிக்கப்படும். 85, சிவன் கோவிலடி. திருநெல்வேலி. (சி-4763)

## யாழ். நகரில் இடிபாடுகளை அகற்ற 40 லட்சம் ரூபா தேவை

(யாழ்ப்பாணம்)

இராணுவ நடவடிக்கைகளினுல் யாழ். நகரில் ஏற்பட்ட இடிபாடுகளை அகற்றுவதற்கு 40 லட்சம் ரூபா தேவைப்படுவதாக யாழ். மாநகரசபை ஆணையாளர் திரு.வி.பி. பாலசிங்கம் தெரிவித்தார்.

விமானக் குண்டு வீச்சுகளினுலும் ஷெல் தாக்குதல்களாலும் யாழ்.நகரின் மத்தியில் உள்ள கட்டடங்களில் ஏற்பட்ட இடிபாடுகளை அப்புறப்படுத்த யாழ்.மாநகரசபைக்கு 40 லட்சம் ரூபாய் தேவைப்படுகின்றது.

இதுசம்பந்தமாக நாம் அரசுக்கு அனுப்பிய மதிப்பீட்டுக்கு 10 லட்சம் ரூபாய் மட்டுமே இதுவரை கிடைத்துள்ளது.

இப்பணத்தை வைத்து நாம் ஒப்பந்த அடிப்படையில் மேற்படி வேலைகளை செய்து வருகின்றேம் என்றும் கூறினுர். (வி)

## விண்ணப்பதாரிகளுக்கு பிறப்பு அத்தாட்சிப் பத்திரம் அனுப்பிவைக்கப்படுகிறது

[மானிப்பாய்]

1987, 88, 89ம் ஆண்டில் பிறப்பு அத்தாட்சிப் பத்திரத்துக்கு விண்ணப்பித்து அவை சேதமடைந்து அல்லது அழிந்து போயுள்ளன என்று யாழ். பிறப்பு இறப்பு பதிவாளர் அலுவலகத்தினுல் அறிவிக்கப்பட்டவர்களுக்கு தற்பொழுது பிறப்பு அத்தாட்சிப்பத்திரங்கள் அனுப்பிவைக்கப்படுகின்றன.

இதுபற்றி இவ்வலுவலக உந்தியோகத்தியோகத்தர் ஒருவர் தெரிவிக்கையில் மேற்குறிப்பிட்ட ஆண்டுகளில் பிறப்பத்தாட்சிப் பத்திரத்துக்கு விண்ணப்பித்து அதற்குரிய மூலப்பிரதிகள் இங்கு சேதமடைந்துள்ளன என சம்பந்தப்பட்டவர்களுக்கு அறிவித்துவிட்டு இதுபற்றி கொழும்புபதிவாளர் அலுவலகத்திற்கும் இவர்களது விண்ணப்பம் அனுப்பி வைக்கப்பட்டது.

தற்பொழுது நூற்றுக்கும் மேற்பட்ட விண்ணப்பங்களுக்கு கொழும்பு பதிவாளர் அலுவலகத்திலிருந்து யாழ். பதிவாளர் அலுவலகத்திற்கு பிரதிகள் அனுப்பிவைக்கப்பட்டு அப்பிரதிகள் மூலம் பிறப்பத்தாட்சிப் பத்திரங்கள் அனுப்பி வைக்கப்படுகின்றன. [71]

## மடு அகதிகள் முகாமில் தொற்றுநோய் பரவுகிறது

(யாழ்ப்பாணம்)

மடுத் தேவாலயத்தில் இயங்கிவரும் அகதிகள் முகாமில், பலத்த தொற்றுநோய்கள் பரவிவருவதாக, அங்கிருந்து வருபவர்கள் தெரிவித்துள்ளார்கள்.

40 ஆயிரம் அகதிகள் தங்கியிருக்கும் இந்த அகதிமுகாமில் சுகாதார வசதிகள் மிகவும் குறைவாகவே இருப்பதாகவும், இப்பகுதியை சுற்றி துர்நாற்றம் வீசியபடி இருப்பதாகவும் கூறப்படுகின்றது,

இம் முகாமில் தற்போது, சின்னமுத்து, வயிற்றேட்டம், காய்ச்சல், கண் வருத்தம் போன்ற வியாதிகள் மிக வேகமாக பரவி வருவதாகவும் இவற்றுக்கு தேவையான மருந்துவகைகள் அங்கு மிக அரிதாக இருப்பதினுல், பெரும்பாலான நோயாளர்கள் தற்போது யாழ். நகருக்கு வந்து சிகிச்சைபெறுவதைக் காணக்கூடியதாக இருக்கின்றது.

இம்முகாமில் தண்ணீருக்கு பலத்த தட்டுப்பாடு நீண்ட நாட்களாக நிலவிவருவதாகவும் கூறப்படுகின்றது [வி]

## இராசி பலன்

26-05-1991

ஞாயிற்றுக்கிழமை

திரயோதசி பி. ப. 3-06 வரை, சுவாதி மு. இ. 8-58 வரை சித்தயோகம், ராகு காலம் மாலை 4-22 முதல் 5-52 வரை சுபநேரம் 8-52 முதல் 10-22 வரை.

மேடம்: தொழில் முன்னேற்றம், பிரயாசமிகுதி, குடும்பசுகம்.

இடபம்: புதியமுயற்சி, இனசன மகிழ்ச்சி, தொழில்லாபம்.

மிதுனம்: இனசன கருத்து மோதல், அதிகாரிகள் தொல்லை, அலைச்சல்,

கடகம்: மரியாதைக் குறைவு, கடன்சுமை, குடும்ப பிரிவு.

சிங்கம்: பெரியோர் ஆசி, பணவரவு, தொழில் சிறப்பு.

கன்னி: வாழ்க்கை அமைதியின்மை, மந்தபுத்தி, மன வருத்தம்.

துலாம்: வெற்றி வாய்ப்பு, உறவினர் சகாயம், குடும்ப மகிழ்ச்சி.

விருச்சிகம்: கணவரால் துன்பம். உற்சாகமின்மை, வசதிக்குறைவு.


தனுசு; சுபகாரிய செலவு. தந்தைவழி உதவி, வேலைக் கடுமை.

மகரம்: பித்தநோய்கள், வியாபாரமேன்மை, இல்லற

[4ம் பக்கம் பார்க்க]

## 10ம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு: 22 - 12 - 1924



உதிர்வு: 14 - 06 - 1981

### வை. இராசையா

[முன்னுள் யானை மார்க், பெப்ஸி குளிர்பான முகவர், சிவாஸ்ரோர்ஸ் உரிமையாளர்]

**திதி: 26-05-1991**

அன்பினுல் எம்மை எல்லாம் அரவணைத்து,
உயர்ந்த வாழ்க்கை என்றுமே நல்கிய
எம்மிதய தெய்வமே!
மீண்டும் மீண்டும் தோன்றி மறையும்
ஆண்டுகள் பல கடந்தாலும் நித்தம்
தோன்றும் உங்கள் நினைவலைகள்
எங்கள் இதயங்களில் மோதிக்கொண்டே இருக்கும்!
உங்கள் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும்

**மனைவி, மகள்மார், மருமகன்மார், பேரப்பிள்ளைகள்.**

65, சிவன்பண்ணை வீதி,
யாழ்ப்பாணம். (சி 4774)

## ஐந்தாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம்: 17-02-1940

மறைவு: 21-05-1986

திதி: 26-05-1991



### அமரர் கந்தையா வேலுப்பிள்ளை

(முன்னுள் யாழ். மாவட்டத் தொலைத் தொடர்புப் பொறியியலாளர்)

அன்பின் திருவுருவே! பண்பின் உறைவிடமே! பாசத்தின் இருப்பிடமே! குடும்பத்தின் குலவிளக்கே! எம்மை ஆருத் துயரில் ஆழ்த்திவிட்டு, மீளாத்துயில் கொண்ட எங்கள் அன்புத் தந்தையே! நீங்கள் எம்மைப் பிரிந்து இன்றுடன் ஐந்து ஆண்டுகள் பூர்த்தியாகிவிட்டாலும், உங்கள் அன்பு முகம் ஓராயிரம் ஆண்டுகள் சென்றுலும் மறையவே மறையாது! தங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றேம்.

**மனைவி, மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.**

''வேல் அகம்'' குருக்கட்டு,
கரணவாய் தெற்கு.
கரவெட்டி. (சி 4701)

### இந்துசமய கலாசார அலுவல்கள் இராஜாங்க அமைச்சரின் அலுவலகம்

# தமிழ் நூல்களுக்குப் பரிசளித்தல்

1. 1990 ஜனவரி 1-ம் திகதி தொடக்கம் 1990 டிசம்பர் 31-ம் திகதி வரையிலான காலப்பகுதியில் வெளிவந்த கீழ்க்கண்ட துறைசார்ந்த நூல்களுக்குப் பரிசில்கள் வழங்கப்படும்.

1. நாவல் 2. சிறுகதை 3. நாடகம்
4. கவிதை 5. இலக்கியத் திறனுய்வு 6. சிறுவர் இலக்கியம்
7. சமூகவியலும் மனிதப் பண்பியலும் 8. அறிவியல் 9. ஏனையவை.

2. நூல் எழுதியவர் இலங்கையராயிருப்பதோடு நூலும் இலங்கையில் அச்சிடப்பட்டதாகவிருத்தல் வேண்டும்.

3. இந்துசமய கலாசார இராஜாங்க அமைச்சரின் அலுவலகச் செயலாளர் நியமிக்கும் மதிப்பீட்டாளரின் மதிப்பீடுகளுக்கும், எடுத்துரைகளுக்கும் அமைய பரிசில்கள் வழங்கப்படும் செயலாளரின் முடிவே இறுதியும் முடிவானதுமாகும்.

4. மேற்குறித்த காலத்தில் இலங்கையில் தமிழ் நூல்களை எழுதி வெளியிட்ட நூலாசிரியர்களோ, வெளியீட்டாளர்களோ ஒவ்வொரு நூலிலும் ஐந்து பிரதிகளை கீழ்க்காணும் முகவரிக்கு தபாலிலோ நேரடியாகவோ 15-08-91க்கு முன்பு கிடைக்கக்கூடியதாக அனுப்பிவைக்கும்படி கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

**பணிப்பாளர்,**
**இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களம்,**
''றக்ஷண மந்திரய'' [9-வது மாடி],
21, வொக்ஷோல் வீதி,
**கொழும்பு-02.**

5. நூல்களை அனுப்பும் உறையில் இடதுபுறமூலையில் ''தமிழ் நூற் பரிசுத் தேர்வு'' என்ற வாசகம் எழுதப்பட்டிருத்தல் வேண்டும்.

6. 1992-ம் வருடம் நடாத்தப்படவுள்ள தமிழ் இலக்கிய விழாவில் பரிசுகள் வழங்கப்படும்.

க. சண்முகலிங்கம்
பணிப்பாளர்
இந்துசமய, கலாசார அலுவல்கள் திணைக்களம்.
கொழும்பு-02
13-05-1991. [எ-1332)

### ராஜீவின் ஆதரவாளர்களில்

# நால்வர் தீமூட்டி தற்கொலை சனநெரிசலில் 7 பேர் பலி

(புதுடில்லி)

இந்தியாவின் முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தியின் சிதைக்கு தீ மூட்டியவேளை அவரது நான்கு ஆதரவாளர்கள் தமக்கு தாமேதீமூட்டித்தற்கொலை செய்து கொண்டனர்.

இதேவேளை ராஜீவின் இறுதிக் கிரியைகளின்போது இடம் பெற்ற சன நெரிசலிலும் சிக்கி ஏழு பேர் உயிரிழந்ததாகவும் பலர் காயமடைந்தாகவும் தெரிவிக்கப்பட்டது. (ரி)

## 60 நாட்டுத் தலைவர்கள் அஞ்சலி

(புதுடில்லி)

60 நாடுகளிலிருந்து பிரதமர்கள், துணை அதிபர்கள் அமைச்சர்கள், துணைஅமைச்சர்கள், அரசகுடும்பத்தினர் ராஜீவின் இறுதிச் சடங்கில் கலந்து கொண்டனர்,

புதுடில்லி தீன்மூர்த்தி பவனில் வைக்கப்பட்டிருந்த ராஜீவின் பூதவுடலுக்கு இவர்கள் மலர் வளையம் சாத்தி தமது அஞ்சலியைத் தெரிவித்தார்கள்.

இறுதிச்சடங்கில் கலந்து கொண்ட முக்கிய தலைவர்களுக்கு பாதுகாப்பு வழங்கும் பணியில் தேசிய பாதுகாப்பு படையின் பத்து அணிகளும், துணை இராணுவப் படையின் 25 அணிகளும் நேற்று பாதுகாப்பு கடமையில் ஈடுபடுத்தப்பட்டனர். (ரி)

## தமிழகத்தில் 8 பேர் கொலை

(சென்னை)

ராஜீவ் காந்தி கொலைசெய்யப்பட்டபின் தமிழகத்தில் இதுவரை 8 பேர் கொலைசெய்யப்பட்டுள்ளனர்.

தமிழநாட்டில் அரசியல் கட்சிகளின் ஆதரவாளர்களிடையே ஏற்பட்ட மோதல்களில் 8பேர் கொலை செய்யப்பட்டுள்ளதாகவும் 2பேர் தீக்குளித்து இறந்ததாகவும், மேலும் இருவர் தீகுளிக்க முற்பட்டபோது படுகாயம் அடைந்துள்ளதாகவும் பொலிசார் தெரிவித்தனர். (வி)

## எழுபது பஸ்கள் தீக்கிரை

(சென்னை)

தமிழ்நாட்டில் கடந்த இரு நாட்களாக நடைபெற்ற வன்செயல்களில் 22 பஸ்கள் எரிக்கப்பட்டதாகவும், 132 பஸ்கள் சேதமாக்கப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இந்த வன்செயல்கள் பெரும்பாலும் திருச்சி, சென்னை மற்றும் பாண்டிச்சேரியிலும் நடைபெற்றன.

ராஜீவ் காந்தி கொலைசெய்யப்பட்டதிலிருந்து நேற்றுநண்பகல் வரை 70 பஸ்சள் வரை தீக்கிரையாக்கப்பட்டுள்ளன. (வி)

## பூநகரி வாடியடியில் நின்ற மோட்டார் சைக்கிள் திருட்டு

(யாழ்ப்பாணம்)

வியாபாரி ஒருவரின் மோட்டார் சைக்கிள் கடந்த 23-ம் திகதி பூநகரி வாடியடியில் வைத்துத் திருடப்பட்டதாக விடுதலைப் புலிகளிடம் புகார் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சம்பவதினம் இரவு ஏனைய வியாபாரிகள் சகிதம் பூநகரி வாடியடியில் தனது மோட்டார் சைக்கிளை நிறுத்திவிட்டு நித்திரை செய்த இந்த வியாபாரி காலையில் எழுந்து பார்த்தபோது தனது மோட்டார் சைக்கிளைக் காணாது அங்கு மிங்கும் தேடினார்.

மோட்டார் சைக்கிளுடன் அதிலிருந்த பெறுமதியான சிலபொருட்களும் திருடப்பட்டுள்ளன.

நாவற்குழியைச் சேர்ந்த வவுனியா வியாபாரியான க. சந்திரன் என்பவரின் மோட்டார் சைக்கிளே இவ்வாறு திருடப்பட்டது.

இது தொடர்பாக பூநகரி மக்கள் முன்னணி அலுவலகத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

## வளர்மதி ச.ச. நிலைய 32வது ஆண்டு விழா

(யாழ்ப்பாணம்)

கைதடி வளர்மதி சனசமுக நிலையத்தின் 32 வது ஆண்டு விழாவையொட்டி இன்று மாலை நிலைய அரங்கில் கலாசார நிகழ்ச்சிகள் நடைபெறவுள்ளன.

நிலையத் தலைவர் சி. சிவலிங்கம் தலைமையில் நடைபெறும் இவ்விழாவில் அறவழிப் போராட்டக்குழு நிர்வாக இயக்குநர் க.ஜீவகதாஸ் பிரதம விருந்தினராக கலந்து கொள்ளவிருக்கிறார்.

கைதடி நாவற்குழி பிரேதச வட்ட அவைப் பொறுப்பாளராக இருந்து அண்மையில் வீரமரணமடைந்த கப்டன் அப்பன் வரலாறுபற்றி வில்லிசை உட்பட சமகால நிகழ்வுகளைக்கொண்ட பல நிகழ்ச்சிகளும் இவ்விழாவில் இடம்பெறும்.

## கடும் வெப்பம் கால்நடை பலி

(கொழும்புத்துறை)

வன்னிப்பகுதியில் ஏற்பட்டுள்ள கடும் வெப்பத்தால் கால்நடைகள் தண்ணீருக்காக அலைவதாகவும் சில இறந்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (154)

# 4-ம் ஆண்டு நினைவஞ்சலி



## வீரவேங்கை கப்டன் அலென்

[ நடனசிகாமணி பாக்கியலிங்கம் ]

தாயின் மடியில்:- 06-05-1962 தாயக மண்ணில்:- 26-05-1987

இந்த மண் எங்கள் சொந்த மண்
இந்த மண் மீட்பதில் நாங்கள் என்றும் தயார்

பாக்கியலிங்கம் வீதி,
வல்வெட்டித்துறை.

வ. இ. நடனசிகாமணி — இரத்தினேஸ்வரி குடும்பத்தினரும்,
சகோதரர்களும், நண்பர்களும்.

(சி-4744)

# "ராஜீவுக்கான பாதுகாப்பு திறம்படவே இருந்தது"

[சென்னை]

ராஜீவ் காந்தியின் கொலை வழக்கை மத்திய புலனாய்வுக் கழகத்திடம் தமிழ்நாடு அரசு ஒப்படைத்துவிட்டது.

இந்த வழக்குமுற்றுப்பெறும் வரை அரசு அதிகாரிகள் எவரும் பத்திரிகையாளரிடம் பேசுவது தடுக்கப்பட்டுள்ளதென தமிழ்நாடு தலைமைச் செயலர் திரு. ரி. வி. அந்தோனி கூறினர்.

பாதுகாப்பு அதிகாரிகளுடன் இணைந்து செயல்பட்ட உயர் பொலிஸ் அதிகாரி ஒருவர் ராஜீவ் காந்திக்கான பாதுகாப்பில் ஒருகுறையும்இல்லாது செய்திருந்தார் என்றும் கூறினர். [பூ]

## நரசிம்மராவ் பதில் தலைவர்

[புதுடில்லி]

இந்திரா காங்கிரஸ் கட்சியின் தற்காலிகத் தலைவராக திரு. பி. வி. நரசிம்மராவ் நேற்றுத் தெரிவு செய்யப்பட்டுள்ளார். [வி(

## இல. தமிழர்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

யோரப் பகுதிகளில் பாதுகாப்புப் படையினரின் ரோந்து நடவடிக்கைகள் தீவிரப்படுத்தப்பட்டுள்ளதாகவும் அவ்வதிகாரி மேலும் தெரிவித்தார். [க]

## தலைமை ஏற்க

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

கப்பட்டுள்ளது.

இவ் எச்சரிக்கை யாரால் எங்கிருந்து விடுக்கப்பட்டது என்ற தகவல் எதுவும் தெரிவிக்கப்படவில்லை. (ரி)

## இலங்கை-பிரிட்டன்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

கூறப்படுகிறது.

உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் யு. என். பி. தொண்டர்கள் தேர்தல் மோசடியில் ஈடுபட்ட தாகப் பிரிட்டிஷ் தூதர் திரு. கிளஸ்ரோன் பகிரங்கமாகக் குற்றம் சுமத்தியதையடுத்தே இச்சர்ச்சை ஏற்பட்டுள்ளது.

இது தொடர்பாகப் பிரிட்டன் சென்றுள்ள திரு. பேர்ணுட் திலகரத்ன குழுவுடன் பிரிட்டிஷ் அதிகாரிகள் பலத்த சர்ச்சை செய்ததாகச் செய்திகள் கூறுகின்றன. [சி]

## 100 தமிழ்

[1ம் பக்கத் தொடர்ச்சி]

னர்.

மேற்படி தகவலை தமிழ்நாடு அரசின் தலைமைச் செயலர் திரு. ரி. வி. அந்தோனி நேற்று சென்னையில் தெரிவித்தார்.

ராஜீவ்காந்தி குண்டுவெடிப்பில் கொலையுண்டமைதைத் தொடர்ந்தே இவர்கள் கைது செய்யப்பட்டதாகவும் தெரிவித்தார். [க]

## ராஜீவை கொன்றது

[1ம் பக்கத் தொடர்ச்சி)

வாறு உடையணிந்து இக்கொலையை செய்திருக்கலாமென்ற கோணத்திலும் விசாரணை நடைபெறுகிறதாம்.

இலங்கை தமிழ் போராளிகள் இதில் சம்பந்தப்பட்டார்களா என்பதற்கான தடயங்கள் எதுவும் இதுவரை கிடைக்கவில்லை என்றும் புலனாய்வுத் துறையினர் தெரிவித்தனர். (சி)

## இராசி பலன்

(2ம் பக்கத் தொடர்ச்சி)

சுகம்

கும்பம்: தொழில் பதட்டம் பங்காளிகள் தொல்லை, மனச் சுமை.

மீனம்: குடும்பவேற்றுமை, பயணத்தடை, உடல்சோர்வு.

- ஜோஸ்யர்

# 30 தமிழர் பற்றி எதுவும் தெரியவில்லை

(வவனியா)

வவனியாவில் அண்மையில் இடம்பெற்ற இராணுவ நடவடிக்கையின் போது படையினரிடம் பிடிபட்ட 30ற்கும் மேற்பட்டவர்களின் நிலைபற்றி இதுவரை எதுவும் தெரியவில்லை.

இவர்களுடன் பிடிபட்ட ஆசிரியர் தர்மலிங்கம் (45 வயது)நொச்சிமோட்டை, கணபதிப்பிள்ளை [65 வயது-கோழியாகுளம் இருவரும் கடும் சித்திரவதையின் பின் விடுவிக்கப்பட்டு தற்போது யாழ் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

படையினர் பிடித்துச் சென்ற ஏனையவர்களின் நிலை பற்றி தமக்குஎதுவும் தெரியாதெனவும் இவர்கள் தெரிவித்தார்கள். (56]

## இலங்கை அரசின்

[1ம் பக்கத் தொடர்ச்சி]

மென்றும் அமெரிக்கா கூறியுள்ளது.

இலங்கை அரசு புலிகளுடன் பேசி பிரச்சனையைத்தீர்க்கமுன் வரவெண்டுமென்றும் அமெரிக்கா கோரியுள்ளது. (சி(

## கேலிக்கூத்து

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

பண்டிகையை முன்னிட்டு 3 நாட்களுக்குப் போர் நிறுத்தம் செய்யப்போவதாக ஸ்ரீலங்கா அரசு ஒருதலைப்பட்சமாக அறிவித்துள்ளது. இந்தத் திடீர் அறிவிப்பு சமாதானத்திற்கான ஒரு நல்லெண்ண சமிக்ஞையல்ல.இது பௌத்த மகா சங்கத்தினரைத் திருப்திப் படுத்தவும் வெசாக் பண்டிகையின் போது இராணுவத்தினருக்கு ஓய்வு கொடுக்கவும் மேற்கொள்ளப்பட்ட தற்காலிக நடவடிக்கையாகும், சமாதான வழிமுறையைக் கேலிக்கூத்தாகும் இந்தப் போர் ஓய்வு அறிவிப்பை நாம் ஏற்றுக்கொள்ளமுடியாது.

நிபந்தனையற்ற பேச்சுவார்த்தைகளுக்கு வழிவகுக்கும் வகையில் காலவரையற்ற போர் நிறுத்தத்தை கடைப்பிடிக்க நாம் என்றும் தயாராக இருக்கின்றோம். இந்த நல்லெண்ண நோக்குடனே நாம் இப்புத்தாண்டில் ஒரு தலைப்பட்சமாக காலவரையற்ற போர் நிறுத்தத்தை அறிவித்தோம்.

ஆனால் ஸ்ரீலங்கா அரசு எமது போர்நிறுத்த அறிவித்தலை நிராகரித்தது. சித்திரை புத்தாண்டில் இன நல்லெண்ணத்துக்கான சமாதான சமிக்கையாக போர்நிறுத்தம் செய்யப்படவேண்டுமென பல்வேறு வட்டாரங்களிலிருந்து வேண்டுகோள் விடுக்கப்பட்டபோதும் சிங்களஅரசு இவற்றுக்கு செவிசாய்க்கவில்லை. இப்பொழுது அறிவிக்கப்பட்டிருக்கும் போர் நிறுத்தம் சிங்களப் பெரும்பான்மை மதப்பிரிவினரை மட்டும் திருப்திப்படுத்தும் வகையில் குறுகிய மதவாத நோக்குடன் மேற்கொள்ளப்பட்டிருப்பது எமக்கு ஏமாற்றத்தைக் கொடுக்கிறது.

''போர் நிறுத்தம் நிரந்தர அமைதிக்கு வழிவகுக்க வேண்டும். சமரசப் பேச்சுக்கான சமாதான சூழ்நிலையையும் இயல்பு நிலையையும் உருவாக்குவதாக அமைய வேண்டும். சிங்கள அரசு உண்மையில் சமாதான வழிமுறைகளை ஆரம்பிக்க விரும்பினுல் நிபந்தனையற்ற, காலவரையற்ற போர் நிறுத்தத்தை அறிவிக்க வேண்டும்'. (வி)

# 3,350 ஆசிரியர்கள்விரைவில் நியமனம்

(கொழும்பு)

புதிதாக 3,350ஆசிரியர்களை நியமிப்பதற்கு கல்விச்சேவை ஆணைக் குழுவினுல் ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இதில் மூவாயிரம் பேர் ஆங்கில ஆசிரியர்களாகவும் ஏனைய 350 பேரும் சங்கீத ஆசிரியர்களாகவும் நியமிக்கப்படவுள்ளார்கள்.

இப் பதவிகளுக்கு அடுத்த மாதம் 4ம் திகதி வரை விண்ணப்பிக்கமுடியும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

க. பொ. த. (சாதாரண) பரீட்சையில் மூன்று பாடங்களில் திறமைச் சித்தி பெற்றவர்கள் ஆங்கில ஆசிரியர் பதவிக்கும், மேற்கத்தைய இசையில் டிப்ளோமா பட்டம்பெற்றவர்கள், இசை ஆசிரியர் பதவிக்கும் விண்ணப்பிக்கலாம்.

ஆங்கில ஆசிரியர்களுக்கான எழுத்துமூலப் பரீட்சை ஜுலை மாதம் நடைபெறும்.

சங்கீத ஆசிரியர்கள் செயல்முறைப் பரீட்சை மூலம் தேர்ந்தெடுக்கப்படுவார்கள்.

இப் பதவிகளுக்கான விபரங்கள் யாவும் இம்மாதம் 24ம் திகதி வெளியான வர்த்தமானியில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ரி)

# தாக்குதல் நிறுத்தம் 'ஹெலி' பிரசுரம் வீச்சு

(யாழ்ப்பாணம்)

வடக்கு-கிழக்கு பகுதியில் 'வெசாக்' தினத்தையொட்டி இன்று நள்ளிரவு முதல்29-ம் திகதி நள்ளிரவு வரையிலான ராணுவ தாக்குதல் நிறுத்தம் பற்றி நேற்று மாலை ஹெலியிலிருந்து துண்டுப் பிரசுரங்கள் வீசப்பட்டன.

யாழ் நகரப்பகுதியை நேற்று மாலை4.15 மணியளவில் வட்டமிட்ட ஹெலியொன்று இத் துண்டுப் பிரசுரங்களை பலபகுதிகளிலும் வீசியது. (சி)

# யாழ். நகரில் புதிய பஸ் நிலையம்

(யாழ்ப்பாணம்)

யாழ். நகரில் புதிய பஸ் நிலையம் ஒன்றை உருவாக்குவதற்கான புதிய திட்டம் ஒன்று தற்போது தயாரிக்கப்பட்டுவருகின்றது.

யாழ்ப்பாணம், லிடோ படமாளிகைக்கு முன்பாக உள்ள குளத்தையே இந்த புதிய பஸ் நிலையத்துக்கு உபயோகிக்கப்போவதாக தெரியவருகின்றது,

இது தவிர வெளியிடங்களுக்கு செல்வதற்கான புதிய பஸ் நிலையம் ஒன்றும் அமைக்கப்பட இருக்கின்றது.

இந்த பஸ் நிலையம் அநேகமாக முத்திரைச்சந்தை அல்லதுசெம்மணிப்பகுதிகளில் அமைக்கப்படலாமெனவும் செய்திகள்கூறுகின்றன. (வி)

## ராஜீவின் கொலை வீடியோ

[1ம் பக்கத் தொடர்ச்சி]

கொலை செய்யப்படுவதற்கு முன் மாலை சூட்டப்படுவது உட்பட சகல நிகழ்ச்சிகளும் அவ்வீடியோ நாடாவில் தெளிவாக தெரிவதாக தெரிவிக்கப்படுகிறது.

இதனைவைத்து புலனாய்வுத் துறையினர் மேலதிக விசாரணையை மேற்கொள்ளவுள்ளவுள்ளனர்.

## ராஜீவின் கொலை

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

ஈராக் - அமெரிக்கப்போரில் அமெரிக்க விமானங்கள் இந்தியாவில் எண்ணை நிரப்ப அனுமதிக்கக்கூடாதென கடுமையாக எதிர்த்து அதில் ராஜீவ் வெற்றிகண்டார். எனவே ராஜீவ் மீண்டும் பிரதமராவதை தடுக்க சி. ஐ. ஏ அவரை கொன்றிருக்கலாம்

ராஜீவ் ஆட்சிக்கு வருவதை புலிகள் விரும்புகிருர்கள். அவருடன் இணக்சமான உறவை ஏற்படுத்திவிட்டனர். இலங்கை அரசுக்கு ராஜீவ் ஆட்சிக்கு வருவது பிடிக்கவில்லை. புலிகள் இந்திரா காங்கிரஸ் பிரசாரத்தில் உதவிவருகிருர்களென பத்திரிகைகள் செய்தி வெளியிட்டுள்ளன.

எனவே ராஜீவுடன் இணக்கம் ஏற்பட்டபின் ராஜீவை புலிகள் ஏன் கொல்லவேண்டும். மேலும் மார்ச் 5ம் திகதி ராஜீவ் புலிகளின் பிரதிநிதியை சந்தித்து உரையாடினுர். இதனையடுத்து ராஜீவுக்கும் புலிகளுக்குமிடையில் ஒருவித உறவு ஏற்பட்டதென்றும் இதையடுத்து திரு. பிரபாகரனுக்கு ராஜீவ் செய்தி ஒன்றை அனுப்பியதாகவும் பத்திரிகைகள் தெரிவித்தன.

எனவே புலிகளின் பெயரை பயன்படுத்தி வேறு கும்பல்கள் இதனை செய்திருக்கலாமென்றும் 'வெரித்தாஸ்' கூறியது. (சி)

## தமிழர் வீடுகள்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

ராஜீவ் கொலையை அடுத்தே இந்த சோதனைகள் மிகத்தீவிரமாக இடம்பெற்றுவருகின்றனவாம்.

இலங்கைத் தமிழர் பலர் இந்நடவடிக்கையின் போது இம்சைப்படுத்தப்பட்டுள்ளனராம். (சி)

# கோயில் வெள்ளி ரதம் எரிந்து சாம்பரானது

[சென்னை]

தமிழகம் திருநெல்வேலியில் நேற்று அருள்மிகு நல்லையப்பர் ஆலய வெள்ளிரதம் தீயினுல் எரியுண்டு சாம்பராகின.

வெள்ளி கவசமுள்ள குதிரை வாகனங்கள் தவிர மற்றைய முழுப்பாகங்களும் எரிந்து போய்விட்டன.

பொலிஸ் அதிகாரிகள் இது ஒரு நாசவேலையென சந்தேகித்துள்ளனர். [பூ]

## கைநூல் வெளியீடு

[பண்டத்தரிப்பு]

சாரணிய ஆசிரியர் திரு. நாகேந்திரம் போஜனினுல் எழுதப்பட்ட சமூக முதலுதவி,குடும்பமுதலுதவி ஆகிய இரு கைநூல்களின் வெளியீடு இன்று மானிப்பாய் மெமோறியல் ஆங்கில பாடசாலையில் நடைபெறவுள்ளது. (72(

## இராணுவ பயிற்சி

[1ம் பக்கத் தொடர்ச்சி)

இலங்கை அரசு விடுத்த வேண்டுகோளையடுத்தே அமெரிக்கா இந்த நிதி உதவியை வழங்கவுள்ளது.

இந்நிதி இராணுவ தளபாடங்களாகவே வழங்கப்படுமென கொழும்பு வட்டாரங்கள் மூலம் தெரியவருகிறது. [சி]

## இந்தியப் பிரதமருடன்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

துக்குச் சென்ற திரு. விஜேதுங்க நேற்றுமாலை சுமார் அரைமணி நேரம் திரு. சந்திரசேகருடன் பேச்சுக்கள் நடாத்தினுர்.

இலங்கைவிவகாரம் குறித்து இவர்கள் பேசியிருக்கலாமெனவும் கூறப்படுகிறது. [சி]

## இராணுவத்தால் மூவர் கைது

(மட்டுநகர்)

மட்டுநகர் மாவட்டத்தில் உள்ள கதிரவெளிப் பகுதியில் இராணுவத்தினர் அப்பகுதியிலுள்ள 3 தமிழ் குடும்பத் தலைவர்களை கைதுசெய்து முகாமுக்கு கொண்டுசென்றுள்ளனர்.

கடந்த 19ம் திகதி மாலை 6 மணிக்கு இராணுவத்தினரால் கைதுசெய்யப்பட்ட இந்த 3 தமிழருக்கும் என்ன நடந்தது என்பதுஇன்னும்தெரியவில்லை. (சி)

# காரைநகர் மாணவர்க்கு

(யாழ்ப்பாணம்)

காரைநகர் கொத்தணிப் பாடசாலைகளில் 11ம் ஆண்டு (1990) கற்ற மாணவர்களை க. பொ. த. உயர்தரத்திற்கு வகுப்பேற்றம் செய்வதற்கான பரீட்சை 28ம், 29ம் திகதிகளில் யாழ். நாவலர் மகாவித்தியாலயத்திலும், வட்டு. இந்துக் கல்லூரியிலும் நடைபெறவுள்ளது.

சகல மாணவரையும் தவருது சமூகம் தருமாறு கொத்தணி அதிபர் திரு. மு. திருநீலகண்டசிவம் தெரிவித்துள்ளார். (சி)

## ★ தமிழக ஆளுநர் பதவி விலகவேண்டும்

(சென்னை)

திரு. ராஜீவ்காந்தி சென்னை வந்தபோது தகுந்த பாதுகாப்பு வழங்கத்தவறியதனுல் தமிழ்நாடு ஆளுநர் பீஸ்மன் நாராயண் சிங் பதவி விலக வேண்டும்.

இவ்வாறு தி. மு. க. தலைவர் திரு. மு. கருணுநிதி நேற்று வெளியிட்ட அறிக்கையில் கூறியுள்ளார். (பூ)

## வெளிநாட்டு

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

டுள்ளதாகவும் எனினும் அவர் இரு மனநிலையில் இருப்பதாகவும் அக்கட்டுரை குறிப்பிட்டுள்ளது. (சி)

இப்பத்திரிகை ''ஈழநாடு'' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேற்கு வீதி 63.ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1991-ம் ஆண்டு மே மாதம் 26ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Registered as a News Paper at the General Post office Sri Lanka under Licence Number B/100306/81.